செய்தி வெளியீடு எண்:530 நாள் :04.10.2013

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் ஆரோக்கியமிக்க சமுதாயத்தை உருவாக்குவதற்காக மருத்துவக் கல்லூரியுடன் கூடிய மருத்துவமனைகளை ஏற்படுத்துதல், நவீன வசதிகளுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுவுதல், மருத்துவமனைகளுக்காக நவீன உபகரணங்கள் வாங்குதல் போன்ற எண்ணற்ற மக்கள் நல்வாழ்வு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை கூடுதலாகி இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த மருத்துவமனையில் பணியாற்ற அலுவலகக் கண்காணிப்பாளர் 1, இளநிலை உதவியாளர் 2, சுருக்கெழுத்து தட்டச்சர் 1, தட்டச்சர் 1, இயன்முறை சிகிச்சையாளர் (நிலை–I) 1, தலைமை மருந்தாளுநர் 1, இளநிலை பொறியாளர் 1, மருந்தாளுநர் 2, மின் இணைப்பாளர் (நிலை–II) 1, மயக்கநிலை தொழில்நுட்பாளர் 2, சமையல்காரர் 1, சார்ஜண்ட் 1, துணி வெளுப்பவர் 3, அறுவை அரங்க உதவியாளர் 5, செவிலியர் உதவியாளர் 5, ஆய்வகப் பணியாளர் 3, அலுவலக உதவியாளர் 2 என கூடுதலாக 33 பணியிடங்களை உருவாக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக 68 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

அரசு மருத்துவமனைகளில் வரும் நோயாளிகளுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அரசு மருத்துவமனைகளில் நவீன நோய் கண்டுபிடிப்பு கருவிகள் வாங்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

அந்த வகையில், சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனைக்காக 3 கோடியே 40 லட்சம் ரூபாய் செலவில் 16 Slice C.T.Scan with Fluoroscopy and Biopsy Robotic Stool என்ற நவீன நோய் கண்டுபிடிப்பு கருவி வாங்குவதற்கும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்காக 1 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் Extra Corporeal Shock wave Lithotripsy என்ற நவீன நோய் கண்டுபிடிப்பு கருவி வாங்குவதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

திருவண்ணாமலையில் இந்த ஆண்டு தொடங்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் உபயோகத்திற்காக ஒருங்கிணைந்த நூலகம் மற்றும் 25 கணிணிகளுடன் கூடிய நிர்வாகக் கூடம் அமைப்பதற்காக 1 கோடியே 50 லட்சம் ரூபாயும், உடல் இயங்கியல், உயிர் வேதியியல், நோயியல், நுண்ணுயிரியல் துறைகளுக்கான உபகரணங்களுக்கு 1 கோடியே 47 லட்சம் ரூபாயும், மருந்தியல், குற்ற ஆய்வியல்,

சமூக மருத்துவம், குழந்தை மருத்துவ இயல், உள நோயியல், தோலியல், தொழுநோய், காசநோய் மற்றும் நெஞ்சக நோய்கள் துறைகளுக்கான உபகரணங்களுக்கு 3 கோடியே 90 லட்சம் ரூபாயும், அறுவை சிகிச்சை, எலும்பியல், நுண்கதிர் வீச்சு பகுப்பாய்வு, காது, மூக்கு, தொண்டை பிரிவு துறைகளுக்கான உபகரணங்களுக்கு 5 கோடியே 22 லட்சம் ரூபாயும், கண்சிகிச்சை, மகப்பேறு மருத்துவம் மற்றும் பெண் நோயியல், மயக்க மருந்து அறிவியல், குழந்தை மருத்துவ அறுவை சிகிச்சை, உடல் குறியியல், திசுவியல் துறைகளுக்கான உபகரணங்கள் வாங்குவதற்காக 4 கோடி ரூபாயும் மற்றும் இதர செலவினங்கள் என மொத்தம் 16 கோடியே 82 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள்தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 4.10.2013.